# PGP Institute of Allied Health Sciences
# NEWS updates
# FEASTOPIA 2026



நாமக்கல் பி.ஜி.பி. இணை மருத்துவ அறிவியல் கல்லூரி சார்பில் உணவு கண்காட்சியை பி.ஜி.பி. கல்வி நிறுவனங்களின் தாளாளர் கணபதி பார்வையிட்ட போது எடுத்த படம்.

## நாமக்கல்

## பி.ஜி.பி. இணை மருத்துவ அறிவியல் கல்லூரி சார்பில் உணவு கண்காட்சி

பரமத்தி வேலூர், ஜூலை.26—

நாமக்கல் மாவட்டம் கரூர்—சேலம் தேசிய நெடுஞ்சாலையில் உள்ள நாமக்கல் பி.ஜி.பி. இணை மருத்துவ அறிவியல் கல்லூரி சார்பில் பி.ஜி.பி. கல்வி நிறுவனங்களின் தலைவர் டாக்டர் பழனி .ஜி. பெரியசாமி, துணைத் தலைவர் விசாலாட்சி பெரியசாமி ஆகியோரின் தொலைநோக்கு வழிகாட்டுதலின்படி பெஸ்டோப்ல—2026 என்ற மாணவர்கள் முன்னெடுத்த உணவு கண்காட்சி நடைபெற்றது. உணவு கண்காட்சியில் ஊட்டச்சத்து, சமச்சீர் உணவு, சமையல் புதுமை மற்றும் தொழில்முனைவு திறன்களை ஊக்குவிக்கும் வகையில் அமைந்தது.

உணவு கண்காட்சியை பி.ஜி.பி. கல்வி நிறுவனங்களின் தாளாளர் கணபதி சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு தொடங்கி வைத்தார். கல்வி நிறுவனங்களின் டீன் டாக்டர் பெரியசாமி, பி.ஜி.பி. துணை மருத்துவ கல்லூரி முதல்வர் டாக்டர் நாகசிந்துஜா மற்றும் பி.ஜி.பி. கல்வி நிறுவனங்களின் அனைத்து முதல்வர்களும் கலந்து கொண்டு உணவு கண்காட்சியை பார்வையிட்டனர்.

தொடக்க விழாவில் புதிய பழங்கள் மற்றும் இயற்கை ஜெல்லியால் கலைநயத்துடன் உருவாக்கப்பட்ட உணவுகளை சிறப்பு விருந்தினர்கள் கேக் வெட்டி தொடங்கி வைத்தனர். இந்த அழகிய கேக் ஆரோக்கியமான உணவு, புதுமை மற்றும் படைப்பாற்றலின் அடையாளமாக அனைவரின் பாராட்டையும் பெற்றது.

முதல்வர் டாக்டர் நாகசிந்துஜா தலைமையில் ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் இணைந்து ஏற்பாடு செய்திருந்தனர். மாணவர்கள் பாரம்பரிய மற்றும் நவீன உணவு வகைகளை கவர்ச்சிகரமான அரங்குகளில் காட்சிப்படுத்தினர். ஒவ்வொரு உணவு பொருளுக்கும் அதன் பொருட்கள், ஊட்டச்சத்து மதிப்பு மற்றும் கலோரி அளவு பற்றிய விவரங்கள் தெளிவாக வழங்கப்பட்டிருந்ததால் பார்வையாளர்களிடையே ஆரோக்கியமான உணவு பழக்கங்கள் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

நிகழ்ச்சியில் உரையாற்றிய தாளாளர் கணபதி, மாணவர்களின் படைப்பாற்றல், குழுப்பணி, சிறந்த வழங்கல் திறன் மற்றும் தொழில்முனைவு மனப்பான்மையை பாராட்டினார். கல்வி நிறுவனங்களின் டீன் டாக்டர் பெரியசாமி, ஊட்டச்சத்து கல்வியை செயல்முறை கற்றலுடன் இணைத்து மாணவர்களுக்கு வழங்கிய கல்லூரியின் முயற்சியை பாராட்டினார். நிகழ்ச்சியில் மாணவர்கள், ஆசிரியர்கள் பங்கேற்றனர்.



### பள்ளிபாளையம் ஒன்றிய

## தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர் மன்றத்தின் செயற்குழு கூட்டம்

பள்ளிபாளையம், ஜூலை.26—

தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர் மன்றத்தின் பள்ளிபாளையம் ஒன்றிய செயற்குழு கூட்டம் குமாரபாளையம் மேற்கு காலனி நகராட்சி நடுநிலை பள்ளியில் ஒன்றியத்தலைவர் கண்ணன் தலைமையில் நடந்தது. இதில் ஒன்றிய துணை தலைவர் நர்மதா வரவேற்புரை ஆற்றினார். மாவட்ட துணை செயலாளர் இளையராஜா முன்னிலை வகித்தார். ஒன்றிய செயலாளர் ரவிக்குமார் தீர்மான விளக்க உரை ஆற்றினார்.

கூட்டத்தில் பேறிஞர் அண்ணா பள்ளி ஆசிரியருக்கு வழங்கிய உயர் கல்விக்கான ஊக்க ஊதிய உயர்வுகளை தொடர்ந்து வழங்கிட வேண்டும். பணியாற்றும் ஆசிரியர்கள் தொடர்ந்து பணியாற்றிடவும், பதவி உயர்வு பெற்றிடவும் பொருத்தமான கல்வி உரிமைச்சட்டத்தை நாடாளுமன்றத்தில் இயற்ற வேண்டும். கட்டாய ஆசிரியர் தகுதி தேர்வில் இருந்து விலக்கு அளிக்கும் வகையில் தமிழ்நாடு சட்டமன்றத்தில் தனித்தீர்மானம் நிறைவேற்ற வேண்டும்.

வருகிற 29–ந் தேதி 5 மணிக்கு நாமக்கல் முதன்மை கல்வி அலுவலகம் முன்பு நடைபெறும் கண்டன ஆர்ப்பாட்டத்தில் பள்ளிபாளையம் ஒன்றியத்தில் இருந்து 20–க்கும் மேற்பட்ட ஆசிரியர்கள் பங்கேற்பது உள்ளிட்ட பல முக்கிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. கூட்டத்தின் முடிவில் ஒன்றிய பொருளாளர் சத்தியமூர்த்தி நன்றி கூறினார்.